**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.84/2024**

**இ.ம.எண்.06/2026**

1) பாரதி

2) சுமதி

3) ரஞ்சித்

4) சர்மா **...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**/எதிர்/**

ரமேஷ் **..எதிர்மனுதாரர்கள்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 05.08.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.O.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால், மேற்படி அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு உரிய காலத்தில் ஆட்சேபனை சமர்பிக்க இயலாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** 1ம் மனுதாரர் மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, கடந்த 02.03.2026 அன்று அறிக்கையும், வரைபடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை மீதான ஆட்சேபனை சமர்பிக்க 10 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு மனு முடிக்கப்பட்டது. மனுதாரருக்கு, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் அனைத்தும் தற்சமயம் வழக்கு விசாரணைக்கு வந்தபோதுதான், அதன் விவரம் தெரியவந்ததால், அதனைப் பொறுத்து ஆட்சேபனை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாய் உள்ளது. இதனிடையே ஆட்சேபனை சமர்ப்பிக்க கால அவகாசம் முடிந்துவிட்டதால், காலதாமதத்தை மன்னிக்க கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆட்சேபனை உரிய காலத்தில் வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்படாமல் இருக்கவில்லை. அது மன்னிக்கத்தக்கது. எனவே, மனுதாரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கி இம்மனுவை ஏற்கவேண்டியது நீதியின் பொருட்டு நியாயமும், அவசியமுமாய் உள்ளது. இல்லாவிடில், மனுதாரர்களுக்கு சிரமம் ஏற்படக்கூடும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**3)** மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனு சரியல்ல, செல்லத்தக்கதல்ல, ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. சட்டப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரர்கள் மனுவில் சொல்லியிருக்கும் சங்கதிகள் உண்மையல்ல. கடந்த 30.08.2025ம் தேதி ஆணையர் ஸ்தல ஆய்வு மேற்கொண்டு, கடந்த 02.03.2026ல் வரைபடத்துடன் கூடிய அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு, இந்நீதிமன்றம் மேற்படி வழக்கினை விசாரணைக்கு

பட்டியலிட்ட நிலையில், வா.சா.1ன் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், வேண்டுமென்றே காலதாமதம் ஏற்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

**4)** மேலும், இந்நீதிமன்றம் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்க உரிய கால அவகாசம் கொடுத்தும் கூட, உரிய காலத்தில் ஆட்சேபனை தெரிவிக்காதது மன்னிக்கத்தத்தது அல்ல. மனுவில், காலதாமத மன்னிப்புக்கு நியாயமான, ஏற்றுக்கொள்ளகூடிய காரணம் எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும், ஸ்தல ஆய்வின் போது உடனிருந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு, ஆணையர் நத்தம் நில அளவை குறித்து எடுத்துக் கூறி அளவைக்கு சம்மதம் தெரிவித்த பிறகுதான், அளவை செய்யப்பட்டது. பிரதிவாதிகளுக்கு பாதகமாக அறிக்கை இருப்பதால், காலம் கடந்து ஆட்சேபனை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல. மேலும், தெரிவித்துள்ள ஆட்சேபனையும் குற்றச்சாட்டு போல் இருப்பதால், நிராகரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகும்.

**5)** மேலும், மேற்படி அசல் வழக்கில், வாதி தரப்பில் சாட்சி விசாரணை தொடங்கப்பட்ட பிறகு, காலம் கடந்து ஆட்சேபனையை ஏற்க மனு செய்திருப்பது சரியல்ல. அவை, இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு அலைகழிப்பையும், காலவிரையத்தையும் ஏற்படுத்துவதற்காக தாக்கல் செய்திருக்கும் மனுவாகும். எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**6)** மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

7) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

8) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால் இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா 'அ' பட்டியல் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா 'ஆ' பட்டியல் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், மேற்படி அசல் வழக்கில் கடந்த 13.03.2026 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு வழக்கு விசாரணைக்காக கடந்த 12.06.2026 அன்று வாய்தா போடப்பட்டு, அதன் மூலம் வா.சா.1 பகுதியாக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படாமல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டுள்ளது.

9) அதுமட்டுமல்லாமல், இ.ம.எண்.3/2024 என்ற மனுவானது, வாதியால் தாவா சொத்தைப் பார்வையிட்டு, அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டும், மேற்படி மனுவும் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அதன்படி, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தாவா சொத்துக்களைப் பார்வையிட்டு நில அளவையர் உதவியுடன் அளந்து, கடந்த 02.03.2026 அன்று இந்நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**10)** அதனைத் தொடர்ந்து, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் ஆகிய சங்கதிகள் குறித்து ஆட்சேபனைகள் இருப்பின், அதை 10 நாட்களுக்குள் தாக்கல் செய்ய இரு தரப்பினர்களுக்கும் இந்நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டு, வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகின்றது. இருப்பினும், இந்நீதிமன்றத்தால் வரையறுக்கப்பட்டுள்ள காலகட்டத்திற்குள் உரிய முறையில் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யாமல், இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் காலம் கடந்து, கடந்த 21.07.2026 அன்று இம்மனுவை மேற்படி அசல் வழக்கில் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**11)** மனுதாரர் தரப்பில், மேற்படி அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, கடந்த 02.03.2026 அன்று அறிக்கையும், வரைபடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கை மீதான ஆட்சேபனையை சமர்பிக்க 10 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு மனு முடிக்கப்பட்டது என்றும், மனுதாரருக்கு, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் யாவும் தற்சமயம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அதன் விவரம் தெரியவந்ததாகவும், அதனைப் பொறுத்து ஆட்சேபனை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாய் உள்ளது என்றும், இதனிடையே ஆட்சேபனை சமர்ப்பிக்க கால அவகாசம் முடிந்துவிட்டதால், காலதாமதத்தை மன்னிக்க கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆட்சேபனை உரிய காலத்தில் வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்படாமல் இருக்கவில்லை என்றும், அது மன்னிக்கத்தக்கது என்றும், எனவே, மனுதாரருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கி இம்மனுவை ஏற்கவேண்டியது நீதியின் பொருட்டு நியாயமும், அவசியமுமாய்

உள்ளது என்றும், இல்லாவிடில், மனுதாரர்களுக்கு சிரமம் ஏற்படக்கூடும் என்றும், எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டியும் வாதிடப்பட்டது.

**12)** மறுபுறம், எதிர்மனுதாரர் தரப்பில், கடந்த 30.08.2025ம் தேதி ஆணையர் ஸ்தல ஆய்வு மேற்கொண்டு கடந்த 02.03.2026ல் வரைபடத்துடன் கூடிய அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன்பிறகு, இந்நீதிமன்றம் மேற்படி வழக்கினை விசாரணைக்கு பட்டியலிட்ட நிலையில், வா.சா.1ன் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், வேண்டுமென்றே காலதாமதம் ஏற்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாகவும், மேலும், இந்நீதிமன்றம் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்க உரிய கால அவகாசம் கொடுத்தும் கூட உரிய காலத்தில் ஆட்சேபனை தெரிவிக்காதது மன்னிக்கத்தத்தது அல்ல என்றும், காலதாமத மன்னிப்புக்கு நியாயமான ஏற்றுக்கொள்ள கூடிய காரணம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும், மேலும், ஸ்தல ஆய்வின் போது உடனிருந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு, ஆணையர் நத்தம் நில அளவை குறித்து எடுத்துக் கூறி அளவைக்கு சம்மதம் தெரிவித்த பிறகுதான், அளவை செய்யப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு பாதகமாக அறிக்கை இருப்பதால், காலம் கடந்து ஆட்சேபனை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்றும், மேலும், தெரிவித்துள்ள ஆட்சேபனையும் குற்றச்சாட்டு போல் இருப்பதால், நிராகரிப்பு செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே, இம்மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியும் வாதிடப்பட்டது.

**13)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் கவனமுடன் பரிசீலனை செய்ததில், நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு இந்நீதிமன்றத்தால் வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் முறையாக ஆட்சேபனை தாக்கல் செய்யாமல், காலம் கடந்து

மனுதாரர்களால் மேற்படி ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்ய மேற்படி அசல் வழக்கில் இருதரப்பினர்களுக்கும் போதுமான வாய்ப்புகள் ஏற்கெனவே இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**14)** இந்நிலையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆட்சேபனைகளையும் சேர்த்து மனுதாரர்களால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அசல் வழக்கில், கடந்த 13.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் எழுவினாக்கள் வனையப்பட்டு, மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்கு பட்டியலிட்டப்பட்டுள்ளது. அதன் பேரில், வா.சா.1ன் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்நிலையில், வழக்கின் நடவடிக்கைகளை மாற்றும் விதமாக, உரிய காலத்தில் ஆட்சேபனை தாக்கல் செய்யாமல் காலம் கடந்து, மேற்படி அசல் வழக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், இந்நீதிமன்றத்திற்கு காலவிரையம் ஏற்பட்டதோடு, இந்த எதிர்மனுதாரருக்கும் அசௌகரியங்கள் ஏற்பட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்படி எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை ஈடு செய்யும் பொருட்டு, இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகின்றது. இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையாக ரூ.200/- மட்டும் இந்த மனுதாரர்கள் வருகின்ற 18.08.2026 அன்றோ, அல்லது அதற்கு முன்போ, எதிர்மனுதாரருக்கு

நேரடியாக செலுத்தும்படி இதன் மூலம் உத்தரவிடப்படுகின்றது. தவறும்பட்சத்தில், இம்மனுவானது தன்னிச்சையாக ரத்தாகிவிடும் என்று இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.08.10 13:44:24 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.08.10 13:44:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**